பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 மாசி 28 ரபி அவ்: 20 இதழ்: 79
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11-3-77

### கச்சதீவு யாத்திரை ஆரம்பம்

## கட்டுப்பாடுகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

கச்சதீவு யாத்திரிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டுப்பாடு உத்தரவுகளை மீறுவோர் மீது இம்முறை சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுமென்று தெரிய வருகின்றது. படகுகள் மீதான சோதனைகளும் கடுமையாக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள குறிக்காட்டுவான், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மயிலிட்டி, யாழ்ப்பாணம் ஆகிய துறைமுகங்களில் இருந்து சுங்கப்பகுதியினரால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் துறைமுகத்தில் இருந்து பிற்பகல் 1-30 மணிவரை ஐந்து படகுகள் யாத்திரிகர்களுடன் கச்சதீவு நோக்கிச் சென்றன.

#### பெண்கள் அதிகம்

இம்முறை யாத்திரிகர்களில் ஆண்களைப் பார்க்கிலும் பெண்களே அதிகமாகக் காணப்பட்டனர். யாத்திரிகர்கள் ஒரு பார் சோப்பும், ஒரு வாசனை சோப்பும் ஒரு தேங்காய் எண்ணெய்ப் போத்தலும், ஒரு குடையும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தங்க ஆபரணங்களைப் பொறுத்தவரையில் தாலிக் கொடியைத் தவிர வேறு எந்த ஆபரணங்களும் பெண் யாத்திரிகர்கள் எடுத்துசெல்ல அனுமதிக்கப்படவில்லை.

#### முதல்தினம் யாத்திரிகர் குறைவு

கடந்த வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில் உற்சவ

(8-ம் பக்கம் பார்க்க)

# மந்திரி சபையை மாற்றி அமைத்தார் பிரதமர்!

## புடவைத் தொழிலுக்கு புதிய மந்திரி; கூட்டுறவும் உணவும் பீலிக்ஸிடம்

கொழும்பு, வியாழன்

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தமது மந்திரிசபையில் மீண்டும் மாறுதல்செய்து புனரமைப்புச் செய்துள்ளார். இந்த மாற்றத்தினால் இதுவரை பிரதித் தபால் தந்தி அமைச்சராக இருந்த திரு. வி. ரி. ஜி. கருணாரத்தின புடவைத் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அமைச்சு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

நிதி, நீதி அமைச்சராகப் பதவிவகித்துவந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா நிதிஅமைச்சுடன் உணவுகூட்டுறவு அமைச்சின் பொறுப்பையும் ஏற்றுள்ளார்.

உணவு கூட்டுறவு, சிறுகைத் தொழில் அமைச்சராக இருந்த திரு. எஸ். கே. கே. சூரியாராய்ச்சி கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தோட்டத்தொழில் அமைச்சராக இருந்த திரு. இரத்தின சிறி விக்கிரமநாயகாவுக்குத் தோட்டத்தொழில் அமைச்சுடன் நீதி அமைச்சும் கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ள அமைச்சர்கள் இன்றுஜனாதிபதிதிருவில்லியம் கோபல்லவா முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

செனட்சபை கலைக்கப்பட்டதும் நீதிஅமைச்சின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா, லங்கா சமசமாஜக்கட்சி ஐக்கியமுன்னணி அரசிலிருந்து வெளியேற்றப் பட்டதும் டாக்டர் என். எம். பெரேராவிடமிருந்த நிதி அமைச்சின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். தோட்டத் தொழில் அமைச்சின் பொறுப்பை டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வாவிடமிருந்து திரு. இரத்னசிறிவிக்ரமநாயகா ஏற்றுக்கொண்டார். சமீபத்தில் கம்யூனிஸ்ட்கட்சி வெளியேறியதும் திரு. பீட்டர்கெனமனின் பொறுப்பிலிருந்த வீட

(8-ம் பக்கம் பார்க்க)

## சனி, ஞாயிறுகளிலும் கூப்பன் துணி வாங்கலாம்

கொழும்பு, வியாழன்

கூப்பன் துணிகளைப் பொது மக்கள் இலகுவில் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நாடு பூராவும் உள்ள சகல கூட்டுறவுக்கடைகளையும் சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்து வைக்கும்படி அரசு அறிவித்துள்ளது.

கூப்பன் கடைகள் துணிகளை கொள்வனவு செய்யும் பொருட்டு 'சலுசலா' நிறுவனமும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்திருக்கும். (இ)

## இந்தியாவில் பத்திரிகையாளர் வேலைநிறுத்தம்

புதுடில்லி, மார்ச் 10

இந்தியாவில் பல தினசரிப் பத்திரிகைகள் இன்று வெளிவரவில்லை. பத்திரிகையாளர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து இன்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ததே இதற்குக் காரணம்!

அரசாங்க 'சமாச்சார்' பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். 'சமாச்சார்' பத்திரிகைகளும் இன்று வெளிவரவில்லை. (ஆ)

## கோஷ்டி மோதலில் ஒருவர் குத்திக் கொலை

### நெடுந்தீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இரு கோஷ்டியினர் மத்தியில் ஏற்பட்டதாகக் கூறப்படும் மோதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார், இருவர் காயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெஞ்சை உலுக்கும் இச்சம்பவம் நெடுந்தீவில் நடந்தது ஒகஸ்டின், அருளப்பு என்னும் இருவருமே காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பவர்களாவர்.

இதில் ஒருவருக்கு முதுகிலும் மற்றவருக்கு இடுப்பிலும் கத்திக்குத்துக் காயம் ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவு பொலிஸ் பிரிவி

(8-ம் பககம் பார்க்க)

## சேர். பொன் அருணாசலத்துக்கு முத்திரை

கொழும்பு, வியா.

காலஞ்சென்ற சேர் பொன்னம்பலம் அருணாசலத்தை கௌரவிக்குமுகமாக ஒரு ரூபா முத்திரை ஒன்று இன்று வெளியிடப்பட்டது.

மத்திய தபால்கந்தோரில்

(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ். வளாக மாணவர் தாக்குதல் சம்பவம்

## இருவர் றிமாண்டில்; ஐவருக்குப் பிணை!

### மூவர் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். வளாக வட்டுக்கோட்டைப்பிரிவின் மாணவர்கள் சிலருக்குகாயம்விளைவிக்கப் பட்ட அசம்பாவித சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் எழுவரில் மூவர் அடையாளம் காணப்பட்டனர்.

1-ம், 3-ம், 7-ம் சந்தேக நபர்களான எஸ். நரேந்திரன், ஜே. ஜேசுதாசன், ஆர். அபயகான் ஆகியோரே அடையாளம் காணப்பட்டனர்.

அடையாளம் காணப்பட்ட முதலாம் சந்தேகநபர் எஸ். நரேந்திரனை 1000ரூபாஉறுதிப் பிணையில் செல்லுமாறு உத்தர விட்ட மல்லாகம் மாவட்டநீதவான் திரு. எம். டி. ஜேசுராதினம் வட்டுக்கோட்டைப் பக்கம் செல்லக் கூடாதென்றும் தந்தையுடன் மதவாச்சியிலேயே தங்கியிருக்கவேண்டுமென்றும் பணித்தார்.

மூன்றும் சந்தேகநபரான ஜே. ஜேசுதாசனையும், 7ம் சந்தேகநபரான ஆர்.அபயகரனையும் இம்மாதம் 16-ம் திகதிவரை றிமாண்டில்வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

2ம் சந்தேக நபரான ஆர். ஆனந்தராஜா, 4ம் சந்தேகநபரான கே.சிவகுமாரன், 5-ம்சந்தேகநபரான வி. சூரியகுமார், 6ம் சந்தேகநபரான ரி. சிவகுமார் ஆகியோரை தலா 1000 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்ட நீதவான் ''வட்டுக்கோட்டைப் பக்கமே நீங்கள் செல்லக்கூடாது. இந் நிபந்தனையைமீறினால்பிணைரத்துச் செய்யப்பட்டுறிமாண்டில் விசாரணை முடியும்வரை வைக்கப்படுவீர்கள்'' என்று எச்சரிக்கை விடுத்தார்.

#### அடையாள அணிவகுப்பு

நேற்று முற்பகல் 10-30மணி முதல் பிற்பகல் 3 மணிவரை மல்லாகம் பதில்நீதவான் திரு. ஜி. வி. பாலசிங்கம் முன்னிலை

(8-ம் பக்கம் பார்க்க)



வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் புதிய இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அஸ்திவாரக்கல்லை யாழ்ப்பாணம் எம். பி. திரு.சி.எக்ஸ்.மார்ட்டின் இன்று மாலை நாட்டுவார். சென்ற வருடம் புதிய வகுப்பறைகளை திரு. மார்ட்டினும், திருமதி மார்ட்டினும் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்டபடம் இது. அருகே வித்தியாலய அதிபர் திரு. நடராசாம் மற்றும் ஆசிரியர்களும் நிற்கின்றனர்.

# யாழ்லயன் களியாட்டு விழா-77

(யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர், ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 19—20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்த விதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன், போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

[1[ வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாய ஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, ][ அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பான்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8[ 90 மைல் மரதன் சயிற்கிள் ஓட்டம் வவனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10[ 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் விதியோட்டம், [12] நீச்சல் போட்டி, ]13] படகோட்டப்போட்டி, [14[ கராட்டிப் போட்டி, ]15[ யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி, [17] யாழ். அழகு ராணிப் போட்டி.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18 வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ......................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்..............................

விலாசம்: ........................

வயது: ................

விளையாட்டுப் போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

.................................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

**பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்**

.......................................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) (யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11) மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம்16-ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## வாடகைக்கு தேவை

அச்சுக்கூடம் நிறுவுவதற்கு யாழ்நகரில் வாடகைக்கு ஓர் இடம் வேண்டும். காங்கேசன்துறை வீதி, விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்.

**கு. பொ. சி. வரதராசா**
120/3, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
5641

## தேவை

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்திற்குக் கீழ்காணும் வெற்றிடங்கட்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொதுமுகாமையாளர் தரம் III
2. கணக்காளர் தரம் III
3. கணக்காளர் லிகிதர்கள் தரம் II
4. பொது லிகிதர்கள் தரம் III
5. சிட்டைபோடும் லிகிதர் தரம் II
6. கிளை முகாமையாளர்கள் தரம் III
7. விற்பனையாளர்கள் தரம் III
8. லொறிச் சாரதி
9. லொறிக் கிளீனர்.

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் கட்டளைச் சட்டத்திற்கு அமைய தகைமைகள் இருத்தல்வேண்டும்.

சங்க எல்லைக்குட்பட்டோருக்கு முதலிடம் அளிக்கப்பெறும்.

சங்கப் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம்.

15-3-77க்கு முன் தலைவர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம், என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புக.

விபரங்கள் அறிய விரும்பும் விண்ணப்பதாரர் சங்க அலுவலகத்தில் அலுவல் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
காரைநகர் ப. நோ. கூ. சங்கம்.
9-3-77 5649

## கேள்வி அறிவித்தல்

### சுன்னுகம் பட்டணசபை

### மத்தியசந்தைக் கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

1-4-77 முதல் 31-12-81 வரை சுன்னுகம் மத்திய சந்தையில் உள்ள கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 21-3-77 நண்பகல் 12-00 மணி வரை சுன்னுகம் பட்டணசபைத் தலைவர், அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் விண்ணப்பத்தின் பேரில் 18-3-77 பிற்பகல் 2-30 மணி வரை சுன்னுகம் பட்டணசபைத் தலைவர் அவர்களிடமிருந்து பெறப்படும் படிவங்களிலேயே சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஒரு கேள்விப்படிவத்தின் கட்டணமாக ரூபா 10/-ம் கேள்விப் பிணைப்பணமாக 8, 12, 13-ம இலக்கக் கடைகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 250/-ம்,31-ம் கடைக்கு ரூபா 100/-ம், காசாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ பட்டணசபை அலுவலகத்தில் செலுத்துதல்வேண்டும்.

4. கேள்வி நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் சுன்னுகம்பட்டணசபைத் தலைவர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை,
சுன்னுகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னுகம்,
7-3-77.

### அட்டவணை

| கடை இல. | வியாபாரம் | ஒவ்வொரு கடையினதும் மாதாந்த வாடகை |
|---|---|---|
| 8 | புடவை/மணிக்கடை | ரூ. 225/- |
| 12 | ஆங்கில மருந்து வகைகள்/ மணிக்கடை | ரூ. 225/- |
| 13 | நகை/மணிக்கடை | ரூ. 225/- |
| 31 | பனம் பொருட்கள்/பலசரக்கு | ரூ. 70/- |

5652

## சிந்தெட்டிக் கற்பூரம் பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

**சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்**
516, ஸ்கின்னர்ஸ் ரேட்டுத் தெற்கு,
கொழும்பு 10.
போன்: 24261-5

## விளம்பரம்

### விற்பனைக்கு

கல்வி பொதுத்தராதர (சாதாரண)ப் பரீட்சை 1977 விண்ணப்பப்படிவம் விலைசதம் ஐம்பது. சொந்த விலாசமிட்டு பதினைந்து சத முத்திரை ஒட்டிய தபால் உறையுடன் ஐம்பது சத முத்திரை அனுப்பித் தபாலில் பெற்றுக்கொள்ளலாம். திருமால் அச்சகம், முள்ளானை, இளவாலை.
5643

க. பொ. த. (சாதாரணம்) விண்ணப்பப்பத்திரம் எம்மிடம் விற்பனைக்குண்டு. ஆங்கிலம் ஒன்று (3-ம் வகுப்பிற்குரியது) சொற்ப பிரதிகளே கைவசம் உண்டு. ஏ. சி. எஸ். புத்தகசாலை,ஏயர்சிலோனுக்கு முன்புறம், 121, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 5644

க. பொ. த. (சாதாரண) பரீட்சை 1977. விண்ணப்பப் படிவங்களை 50 சதம் செலுத்திப்பெறலாம். யாழ். சட்ட நிலையம், பிரதானவீதி, யாழ்ப்பாணம். 5647

காணி: இயக்கச்சியிலிருந்து ஆறுமைல் தூரத்தில் நித்திய வெட்டையில் தென்னம் பிள்ளை, மாமரங்கள், பனைகள் அடங்கிய 10 ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு-கில்பறி கணபதிப் பிள்ளை, நித்தியவெட்டை, முள்ளியான். 5653

### தேவை

தொழிற்சங்க அனுபவமுள்ள நிர்வாகக்காரியதரிசி தேவை. மும்மொழி தெரிந்தவருக்கு முன்னுரிமை. தகைமைக்கேற்ப சம்பளம். விண்ணப்பிக்க. விளம்பர இல: 5642, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 5642

### கல்வி

இலங்கைப் பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப்படிப்புகள் 1977.சட்டம்,கலை,வர்த்தகம், உயர்தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். யாழ். சட்ட நிலையம்,பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5643

## கேள்வி அறிவித்தல்

### சுன்னுகம் பட்டணசபை

### மீன் சந்தைக் கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

1-4-77 முதல் 31-12-77 வரை கீழ்க்காணும் உரிமைகளுக்கான கேள்விகள் 21-3-77 நண்பகல் 12-00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கருவாட்டுக் கடைகள் இல. மீ-2, மீ-3, மீ-4, மீ-5, மீ-6, ஆகியவற்றில் கருவாடு அல்லது மீன் விற்றல்.

18-3-77 பி. ப. 2-30 மணிக்கு முன்பதாக, ஒவ்வொரு கடைக்கும் கேள்விப் பிணைப் பணமாக ரூபா 100/-ம், கேள்விப் படிவ விலையாக ரூபா 10/-ம் செலுத்துவதன் பேரில் கேள்விப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகளையும், மற்றும் விபரங்களையும் சுன்னுகம் பட்டணசபைத் தலைவர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை, சுன்னுகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னுகம்.
7-3-77 5651

# வாஷிங்டன் 3 கட்டிடங்களில் 100 பேர் துப்பாக்கி முனையில் பணயம்

## காரணத்தை அறியுமாறு கார்ட்டர் உத்தரவு

வாஷிங்டன், மார்ச் 10

வாஷிங்டனில் மூன்று கட்டிடங்களுள் நுழைந்த சிலர் துப்பாக்கி முனையில் அங்கிருந்த சுமார் 100 பேரைப் பணயம் வைத்தனர். பணயம் வைக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பதுபற்றி உடனடியாகத் தகவல்கிடைக்கவில்லை. இக்கட்டிடங்களில் நடைபெற்ற குழப்பத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்,

இன்று அதிகாலை இச்சம்பவம் நடந்தது. இதுதொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜனதிபதி கார்ட்டர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பணயம் வைக்கப்பட்டிருந்தவர்களில் வாஷிங்டன் மாநகர சபைமுதல்வரும்ஒருவர். இவர்களைப் பணயம்வைக்கப்பட்டதற்கு காரணத்தை இவர்கள் உடனடியாக வெளியிடவில்லை.

கட்டிடங்களில் நடந்த கலவரத்தில் காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவத்துக்கான காரணம் பற்றி உடனடியாக விசாரணைசெய்யுமாறு ஜனதிபதி கார்ட்டர் உத்தரவிட்டார். (ஆ)

## அரசாங்கம் கலைப்பு

லண்டன், மார்ச் 10

பெல்ஜியம் அரசாங்கம் ராஜினமாச் செய்துள்ளது. அத்துடன் புதிய தேர்தலுக்கான திகதியையும் அறிவித்துள்ளது. ஏப்ரல் மாதம் 17ம் திகதி இங்கு தேர்தல் நடக்கும். (ஆ)

## சிலியில் சிலமந்திரிகள் ராஜினமா

லண்டன், மார்ச் 10

சிலிநாட்டு மந்திரிசபையிலிருந்து பல அமைச்சர்கள் ராஜினமாச் செய்துள்ளதாக செய்திகள் கூறின. எத்தனை மந்திரிகள் ராஜினமாச் செய்தனர் என்பது பற்றி உடனடியாக தகவல் கிடைக்கவில்லை. (ஆ)

சிறைக் கொடுமைபற்றி

## விசாரணை கேட்டோம்; வழக்குத் தொடுத்துள்ளனர்

### இதிலும் தமக்கு மகிழ்ச்சி என்கிறுர் கருணநிதி

சென்னை, மார்ச், 10

''சிறையில் நடைபெற்ற கொடுமைகள் பற்றி விசாரணை செய்யுமாறு நாங்கள் கேட்டோம். அரசு அதைத் தட்டிக் கழித்துவிட்டது. ஆனல் சிறையில் நடந்த கொடுமை பற்றி பேசிய எமது பொதுச் செயலாளர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு விசாரணையில் மாட்டிக்கொண்டதில்மகிழ்ச்சி அடைகிறேம்.''

இவ்வாறு தி. மு.க. தலைவர் திரு. மு. கருணநிதி சைதைத் தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

திரு. கருணநிதி மேலும் கூறியதாவது:

''அரசு ஊழியர் ஒருவர் அரசின் அனுமதியின்றி வழக்குத் தொடுத்திருக்க முடியாது என்று கருதுகிறேன். எனினும் விசாரணைக்கு வருகின்றதே என்பதில் எமக்கு மகிழ்வுதான்.

அசைக்கமுடியாத எடுத்துக்காட்டுகள்

''நாம் விசாரணை வேண்டுமென்று கேட்டோம். அது இல்லை என்று மறுத்தவர்கள் இன்றுதாங்களாகவே ஒரு வழக்குத் தொகுத்து மாட்டிக் கொண்டிருக்கிறுர்கள். நம்மிடம் அசைக்கமுடியாத எடுத்துக்காட்டுகள் உள்ளன. நமது சிறைமீண்ட நண்பர்களின் உடலில் இன்னும்மாருத வடுக்கள் அப்படியே இருக்கின்றன.

''சிட்டி பாபு தமதுகைப்பட எழுதிய நாட்குறிப்பும் நம்மிடம் இருக்கின்றது. இது தொடர்பான எந்த வழக்கையும் நாம் சந்திக்கத் தயாராக இருக்கிறேம்'' என்றும் கூறினர். (இ)

"பழைய காங். — தி. மு. க.கூட்டு

## காமராஜும் நானும் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம்"

### — மு. கருணநிதி

மதுரை, மார்ச் 10

''இந்திராகாந்தியை பிரதமராக்கியது பெருந்தலைவர் காமராஜர் செய்த குற்றம். அவரைப் பதவியில் நீடிக்கச்செய்த குற்றம் எங்களைச் சேர்ந்தது'' என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதி மதுரையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், இந்த இரு குற்றங்களுக்கும் பிராயச்சித்தம் செய்யத் தான் நாங்கள் இரு கட்சிகளும் இன்று கூட்டுச் சேர்ந்திருக்கிறேம்.

தி. மு. க. ஆட்சியை பதவியில் இருந்து இறக்கவேண்டும் என்ற சொன்னபோது காமராஜர் அதை திட்டவட்டமாக எதிர்த்தார்.

எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி ஜனநாயக முறையில் தான் மாற்றம் கண்டாக வேண்டும் என்று அவர் சொன்ஞர்.

காமராஜர் இறந்ததும் நாம் கட்டிமுடித்த நினைவு ஆலயத்தை திறக்க ஆட்சியாளர்கள் ஓடிவந்தார்கள். அரசியல் லாபம் கருதியே அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பது கண்கூடு என்ஞர். (உ)

## கொலைசெய்ய தூண்டியவன் போலவாஎன்னை தெரிகிறது

### மதுரைகூட்டத்தில் கருணநிதிகேள்வி

மதுரை, மார்ச் 10

''என்னைப் பார்த்தால் கொலை செய்யத் தூண்டியவன் மாதிரியாகவா தெரிகிறது?'' என்று மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகையில்தி.மு க.தலைவர்கலைஞர் மு. கருணநிதி கேட்டார்.

கலைஞர் கருணநிதி இக்கூட்டத்தில் பேசுகையில், ''நான் கொலை செய்யத் தூண்டினேன் என்று ஒரு வழக்குப் போட்டிருககிறுர்கள்.

என்னைப் பார்த்துப் பார்த்து அனுபவப்பட்ட மதுரை மாவட்டப் பெரியோர்களே தாய்மார்களே, சகோதரிகளே, வாலிபர்களே என்னைப் பார்த்தால் கொலை செய்யத் தூண்டியவன் போலவா தெரிகிறது?'' என்று கேட்டார்.

மக்கள் குரல் 'இல்லை, இல்லை' என்று அவ்வேளை எழுந்தது.

அவர் மேலும் பேசுகையில்,

''கண்ணில் தூசி வீழுந்ததும் அதை எடுப்பதற்கு பிறர் வாயினல் ஊதினல் தொற்றுநோய் கிருமிகள் பரவி பாதிப்பு ஏற்படலாம். கைகளினல் கசக்கினல் வெள்ளை விழி, கருவழிகளில் தூசியினல் சீறல் வீழுந்துவிடலாம். ஆனல் சற்றுநேரம் பொறுமையாக இருந்தால் கண் கலங்கி கண்ணீர் நிற்கும். கண்ணில் விழுந்த தூசி கண்ணீரில் மிதந்து கடைக்கோடிக்கு வந்துவிடும். பின் சுலபமாகத் தூசியை விரவால் எடுத்துவிடலாம். அதுபோல்தான் கலங்கி நிற்கும் தூசியை 19-ந் திகதி தூக்கி எறிய இருக்கிறேம்.

காமராஜரின் உண்மையான வாரிசுகளும், அண்ணவின் உண்மையான தம்பிகளும் ஒன்றுபட்டு நிற்கிறேம். ஜனநாயக உரிமைகளைக் காக்க போராடுகிறேம்'' என்ருர். (உ)

## அன்புக் கட்டளையை நிறைவேற்றினர்எம்.ஜி.ஆர்.

சென்னை,மார்ச் 10

எம். ஜி. ஆரின் முகத்தைநன்ருகப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் அவர்அணிந்திருந்த கறுப்புக் கண்ணடியைக் கழற்றும்படி மாணவர்கள் எம். ஜி. ஆரைக் கேட்டனர்.

மாணவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று எம். ஜி. ஆர். சிரித்தவாறே கண்ணடியைக் கழற்றிவிட்டு''போதுமா? பார்த்து விட்டீர்களா?'' என்று கேட்டார். மாணவர்களும் திருப்தியடைந்தார்கள்.

சென்னை மாம்பக்கம் உயர் நிலைப்பள்ளியருகே இச்சம்பவம் நடைபெற்றது.

தேர்தல் பிரசார வேலைகளின் பொருட்டுமேற்படி பள்ளியைக் கடந்து 'வானில் எம்.ஜி. ஆர். போய்க் கொண்டிருக்கையில் எம்.ஜி.ஆரைப்பார்ப்பதற்காக மாணவ, மாணவிகள் வகுப்பு அறையைவிட்டுவெளியேவந்து விட்டார்கள்.

அவர்களுக்கு எம். ஜி. ஆர். வணக்கம் கூறினர்.

அப்போதே மேற்படி அன்புக் கட்டளைஅவருக்கு விடுக்கப்பட்டது. (உ)

## சிவாஜியின் படங்கள் இனி ஓடும் என்கிறுர் கலைஞர்

நெல்லை, மார்ச் 10

சிவாஜி கணேசனும், எம். ஜி. ராமச்சந்திரனும் இணைந்தது பற்றி தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதி கருத்து வெளியிட்டுள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் செய்த கலைஞர் தூத்துக்குடியில் நிருபர்களுக்கு பேட்டி ஒன்றினை அளித்தார்.

''சிவாஜி கணேசன் எம். ஜி. ஆருடன் இணைந்ததுபற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு கருணநிதி பதிலளிக்கையில் ''சிவாஜிக்கு ரசிகர் இல்லை.எம் ஜி. ஆருக்கு ரசிகர்கள் இருக்கிறுர்கள். இணைந்ததால்சிவாஜிக்குத்தான் லாபம்— இப்போது சிவாஜியின் படங்கள் ஓடுவதில்லை. இனி நன்ருக ஓடும்'' என்ருர். (உ)

## அண்ணு தூற்றப்படுகையில் எம். ஜி. ஆர். மௌனமா?

### நெடுஞ்செழியன் ஆவேசம்

சென்னை, மார்ச் 10

''அறிஞர் அண்ணவை சனியன் என்று பேசியிருக்கிறுர் முன்னள் தமிழ்நாடு காங்கிரஸ் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன். நடிகர் எம். ஜி. ஆருக்கு வெட்கம்,மானம், சூடு, சோரணை இருந்திருந்தால் இதைக்கேட்டுக்கொண்டு அக்கூட்டத்தில் உட்கார்ந்திருப்பாரா?'' என்று தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் கேட்டார்.

மயிலை மாங்கொல்லையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் நாவலர் நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது:-

''லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் ஆர். வெங்கட்ராமன் பேசும்போது 'ஏழரை நாட்டுச் சனியன்' என்று சொல்வார்கள். ஆனல் இந் நாட்டை 9 ஆண்டு கால சனியன் ஆண்டது என்று குறிப்பிட்டிருக்கிறுர்.

''தமிழகத்தைப் பேரறிஞர் அண்ணு அவர்கள் ஆண்டது இரண்டு ஆண்டு. கலைஞர் கருணநிதி ஆண்டது ஏழு ஆண்டு. அண்ணவும்சனியன் கலைஞரும் சனியன் என்று பேசியிருக்கிறுர் வெங்கட்ராமன். இதைக் கேட்டுக் கொண்டு எம். ஜி. ஆர். அக் கூட்டத்தில் அமர்ந்திருக்கிறுர்.'' (உ)

''ஜனதா பதவிக்கு வந்தால்

## மாநில சுயாட்சி மீண்டும் கிடைக்கும்''

சென்னை, மார்ச், 10

ஜனதா கட்சி பதவிக்கு வந்தால் மாநில சுயாட்சியை திரும்பவும் கொண்டுவருவோம் என்று சென்னையில் பேசிய திரு. பாபு ஜெகஜீவன் ராம் கூறினர்.

சென்னை பனகல் பூங்காவில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசும்போது அவர் மேலும் கூறியதாவது: ''நமதுஅரசியல் சாசனம் இந்திராகாந்திக்கு கொடுத்துள்ள அதிகாரங்களில் அவர் திருப்தி அடைந்துள்ளதாகத் தெரியவில்லை. அவர் தன்னுடைய கரங்களில் இன்னும், அதிகமான அதிகாரங்களைக் குவித்துக்கொள்ள விரும்புகிறுர்.

''இந்தஉணர்ச்சியோடுநெருக்கடி நிலை அமுலுக்குக்கொண்டு வரப்பட்டால், அரசமைப்புச் சட்டத்தை திருத்தியதன் மூலம் அவர்கள் மாநில சுயாட்சியை பெருமளவு உருக்குலைத்துவிட்டார்கள். மறைமுகமாக இந்நாட்டில் இருக்கின்ற எல்லா மாநிலங்களையும் தனது கட்டுக்குள்கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர்.'' (க)

## மொரார்ஜியை எம். ஜி. ஆர். தாக்கிப் பேசுவதா?

### பழைய காங்கிரஸ் தலைவர் சீற்றம்

சென்னை, மார்ச் 10

ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய்மீது அ. இ. அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. ஆர். குற்றஞ் சாட்டி பேசியிருப்பது குறித்து தமிழ்நாடு பழைய காங்கிரஸ் தலைவர் திரு. பா. இராமச்சந்திரன், ''யாரைப் பார்த்து யார் சொல்வது? இந்த அரசியலை இவ்வளவு அநாகரிகமாக ஆக்கிவிட்டார்களே'' என்று கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் திரு.பா.இராமச்சந்திரன் பேசுகையில், ''யாரோ ஒரு நடிகர் சொன்ஞராம் மொரார்ஜி தேசாய் ஏதோ உத்தியோகம் பார்க்கத் தெரியாமல் லஞ்சம் வாங்கியதற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டவர் என்று மொரார்ஜியினுடைய வாழ்க்கையை பற்றியோ அரசியலைப் பற்றியோ ஒரு வாழ்த்துக்கூடத் தெரியாத நபர் இப்படி சொன்னதாக பத்திரிகையிலே பார்த்தேன். இதையிட்டு மனம் வேதனைப் படுகிறேன். யாரைப் பார்த்து யார் சொல்வது?

இந்த அரசியலை இவ்வளவு அநாகரிகமாக ஆக்கிவிட்டார்களே என்று பார்க்கின்ற போது தமிழக அரசியல் இவ்வளவு மட்டாகமாக ஆகிவிட்டதே என்று நாம் வேதனையடைகின்ேறம்'' (உ)

### மணிவாக்கு

எவரும் பிறர் எவரையும் ஏமாற்ற வேண்டாம்
எவரும் பிறர் எவரையும் அவமதிக்க வேண்டாம்
பிறருக்குத் துன்பம் இழைக்கக் கருதி எவரும்
எவரிடமும் பகைமை பாராட்ட வேண்டாம்.

— புத்தமதம்

ஈழநாடு
THE EELANADU

# துணி விநியோகம்

கூப்பனுக்கு மூன்றுயரர் துணி விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதுமே துணிப்பஞ்சம் ஓரளவு குறைந்து விடுமென்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.

அதிக விலைகொடுத்து வெளியே துணிவாங்க வேண்டிய அவசியமேற்படாதென்றும் அவர்கள் நினைத்தார்கள்.

துணிவிநியோகம்தொடங்கப்போகிறதென்று அறிவித்தல் கிடைத்ததுமே சங்கக்கடைகளின் வாசல்களில் அநுமார் வால்போலமக்கள் கியூ நீளத் தொடங்கி விட்டது.

காலையிலிருந்து மாலை வரை இந்தக் கியூக்களைக் காணமுடியும்

துணி வாங்குவதற்கு இலக்க அட்டைகள் பெறுவதற்குத்தான் இந்தக் கியூ.

இலக்க அட்டை பெற்று முடிந்தபின் கடைக்குள் மற்றொரு கியூ.

கடைக்கு வெளியேயுள்ள கியூக்களில் பல தொல்லைகள். காடைத்தனத்துக்கும் ஈடுகொடுக்கவேண்டும் ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்ற நிலை.

கடைக்குள் நுழைந்த பின் கெடுபிடிகள் மோசடிகள்!

நீண்டநேரம் கால்கடுக்க கியூவில் நின்றவர்கள் 'எப்படியோ சமாளித்து உள்ளே சென்றால் கியூவில் நிற்காமலேயே சிலர் உள்ளே தமது விருப்பப்படி துணி பெறுவதைச் சில கடைகளில் பார்த்தவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

சிலகடைகளில் கிளைக்குழு உறுப்பினர்கள் துணி விநியோகத்துக்கு 'உதவியும் ஒத்துழைப்பும் அளித்து நல்லவற்றைக் கஷ்டமின்றி எடுத்துச் சென்றதாகவும் புகார்களுண்டு.

துணிகளை அளக்கும் பொழுது 'கையை இழுத்து' அளக்கும் சாதுரியம் பற்றியும் சொல்லப்படும் புகார்கள் பல.

எல்லாச் சங்கங்களிலும் எல்லாக்கிளைகளிலும் இந்த மோசடிகள் நடைபெறுவதாகச் சொல்லமுடியாது.

மோசடிகள் நடைபெறாத சங்கங்களும் கிளைகளும் மிக மிக அரிது என்றே சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாடு முழுவதுமே ஊழலுக்கும் மோசடிக்கும் பெயர் பெற்று விளங்குவது இந்தச் சங்கக்கடைகள்.

யாழ்ப்பாண மாநகர பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு கிளையில் துணி வாங்கச் சென்ற ஒரு பெண்ணிடம் நான்கு கூப்பன் புள்ளிகளை வெட்டி எடுத்து இரண்டு புள்ளிகளுக்குத் துணியைக் கொடுத்து மிகுதித் துணிக்கு அடுத்தவாரம் வருமாறு கூறினாராம் அந்த மனேஜர்.

இதுபற்றி அந்தப் பெண் சங்கத்தலைவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகத்துக்குப் புகார் செய்ததைத் தொடர்ந்து உடன் நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படி எத்தனை சங்கக் கடைகளில் என்னென்ன மோசடிகள் நடந்திருக்குமோ?

எல்லோரும் இவைபற்றித் தெரிந்து புகார் செய்து கொண்டிருக்கிறார்களா?

புகார் செய்து அதுபற்றி விசாரணைகளில் நேரத்தையும் காலத்தையும் செலவிட எல்லோருக்கும் வாய்பிருக்கிறதா?

இந்த துணி விநியோகத்தை நல்ல நோக்கத்துடன் தான் அரசாங்கம் கொண்டுவந்தது.

பாவனையாளர்களுக்கு அதுவும் கிடைக்கவேண்டியவர்களுக்கு இந்தத்துணி கிடைக்க வேண்டுமென்பது தான் அரசின் எண்ணம்.

ஆனல் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பெருச்சாளிகள் அதிகம் என்பதை அமைச்சு மறந்துவிட்டது போலும்.

துணி விநியோகத்தில் மட்டுமல்ல இதர பொருள்களின் விநியோகத்திலும் ஒழுங்குமுறை நிலவுவதற்கு இனியாவது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

## 20நாட்களாக வேலைநிறுத்தம்: 34 கிளைகளும் முற்றாகப் பூட்டு

### நாளாந்தம் பாவனையாளர் கஷ்டம்!

சங்கானை, வியா.

சங்கானை ப. நோ. கூ. சங்க வேலைநிறுத்தம் கடந்தஇருபது நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. இதனல் சங்கஎல்லைக்குள்இருக்கும் பொதுமக்கள் பங்கீட்டுப் பொருட்களைப் பெறமுடியாது பெருங்கஷ்டத்திற்காளாகியுள்ளனர். சங்கமும் அதன் 34 கிளைகளும் பூட்டப்பட்டிருக்கின்றன.

வேலைநிறுத்த ஊழியர்களின் கோரிக்கைகள் பற்றி எவரேனும் செவிசாய்த்ததாகத்தெரியவில்லை. பொதுச்சபை உறுப்பினர்களும், பொதுமக்களும் சேர்ந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் யாழ். கச்சேரி கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்காரியாலயங்களில்சத்தியாக்கிரகம் அனுஷ்டித்து மேலதிகாரிகளிடம் சமர்ப்பித்த கோரிக்கைகளும் இதுவரைகாலமும் மேலதிகாரிகளால் தட்டிக்கழிக்கப்பட்ட நிலையிலே உள்ளன.

இப்பகுதி மக்கள்படும்சொல்லொணாத் துயர்பற்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு ஒரு சமரச முடிவு காணும் வண்ணம் தமிழர்கூட்டணித்தலைவருள் ஒருவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்றங்கள், மக்கள் கமிட்டித் தலைவர்கள், இணக்கசபைத்தலைவர்கள் சம்பந்தப்பட்ட மேலிடங்களையும் பிரதமரையும் அவசரத் தந்திமூலம் கேட்டிருந்தும் அக்கோரிக்கைகள் பயனற்றுப் போயின.

எனவே இப்பகுதிமக்கள் சத்தியாக்கிரகத்தை உருமாற்றி சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்க நடவடிக்கைமேற்கொள்வதற்கு முனைந்துள்ளனர்.

இவ்வுண்ணாவிரதம் இறுதிக்கட்டமாககூட்டுறவுஅமைச்சர் கூட்டுறவு ஆணையாளர் காரியாலயங்களிலும் அவ்வப்பகுதி அ. இ. கூ. சம்மேளன பிரதிநிதிகளுடன் கூடியவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூ. சம்மேளனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இது இப்படியிருக்க பிரத்தியேக வியாபாரிகள் மூலம் விநியோகம் நடைபெற்றுவந்த அரிசியும் இதுவரை வழங்கப்படவில்லை. மற்றைய உபஉணவுப்பங்கீட்டுப் பொருட்களும் கொடுபடவில்லை. (க-அ)

# ''நியாயமான போராட்டத்திற்கு வெற்றி நிச்சயம்''

கல்குடா, வியா.

''அரச உயர்பதவிகள் அனைத்தும் திறமையின் அடிப்படையில் வழங்கப்படாது பெரும்பான்மை இனத்தவர்களுக்கே வழங்கப்படுகின்றன. பல்கலைக்கழகப்படிவாசல் இன்னும் சில ஆண்டுகளில் தமிழனுக்கு அறவே கிட்டாத ஒன்றாக ஆக்கப் படக்கூடிய அளவுக்கு தரப்படுத்தல் என்ற கொடிய திட்டத்தின் மூலம் தமிழர்கள் மட்டந்தட்டப் படுகின்றார்கள். தமிழரின்சிறந்த மூளைகள் இன்று சிங்கள அரசால் மதிக்கப்படுவதில்லை. எதிர்வரும் பொதுத் தேர்தல் தமிழ் ஈழக்கோரிக்கையைமுன் வைத்து சர்வஜன வாக்கெடுப்பாக நடத்தப்படவிருப்பதால் தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழும் தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை வெற்றிபெற வைக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் பேசும் மகனதும் கடமையாகும். தமிழர்களது போராட்டம் நீதியும் நியாயமும்நிறைந்ததாகையால் இப்போராட்டம் நிச்சயமாக வெற்றி பெற்றேதீரும்''

மேற்கண்டவாறு கல்குடா தொகுதியிலுள்ள வாகரை செல்வவிநாயகர் ஆலய முன்றலில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார். கூட்டம் ஆரம்பமாகுமுன் பண்டிதர் கா. பொ. இரத்தினம், கூட்டணியின் கல்குடாத் தொகுதி அமைப்பாளர் திரு. ஐ. சம்பந்தமூர்த்தி, திரு. எஸ். கே. மகேந்திரன் ஆகியோர் வாகரை நற்பணி யக முன்றலில் மாலைகள் அணிவிக்கப்பட்டு அங்கிருந்து கூட்ட மைதானம்வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

திரு. கே. குரூஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எஸ். கே. மகேந்திரன் பேசியதாவது:

''தமிழர்கள் தமிழ் ஈழம் நிறுவத் தயாராகிவிட்டார்கள் என்பதை உலகிற்குக்காட்டப்போகும் எதிர் வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் தமிழனுக்கு எதிரானது என்பதை தமிழ்த் தேசிய இனம் தெரிந்துகொள்ளவேண்டும்''

திருவாளர்கள் ஐ. சம்பந்தமூர்த்தி, க. பத்மநாதன், கே. கோவிந்தசாமி வாகரை-வாணன், முகிலன் ஆகியோரும் பேசினர். (உ)

## பயிர்நோய் தடுப்புமுறை போதனு வகுப்பு

நல்லூர், வியா.

விவசாயிகளின் நலன் கருதி விவசாயப்பயிர்களைத் தாக்கும் நோய்களைப்பற்றியும் அவற்றை தடுப்பதற்கான வழி முறைகள் பற்றியும் விரிவான இலவச ஆலோசனைகளை கமத்தொழில் துறை அறிஞர்கள் யாழ்ப்பாணம் ரோறு ஸ்தாபனத்தில் நேற்று விவசாயிகளுக்கு அளித்தனர். இவ் விவசாய இலவச ஆலோசனையைத் தவறுது பெற்று பயன் பெறுமாறு விவசாயிகளை ரோறு ஸ்தாபன விவசாயப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்றும் கடந்தவாரமும்நடைபெற்றஇப் போதனை வகுப்பில் நூற்றுக் கணக்கான விவசாயிகள் விவசாய ஆலோசனை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ''விடுதலைப் போராட்டத்தில் அண்ணுவழியில் தம்பியர்'

### சிவசிதம்பரம்

உடுப்பிட்டி, வியாழன்

''தமிழ்மக்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஒன்றுபட்டுத் தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராடவேண்டும் என்ற உணர்விலேயே அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், அமரர் திருச்செல்வம் ஆகியோர் தமிழ் நாட்டில் தமிழனின் துயர்துடைக்க பாடுபட்டுழைத்தார்கள். அமரர் அறிஞர் அண்ணுவின் இலட்சியமும் இதுவேயாகும். உலகத்தமிழன் எங்கிருந்தாலும் தமிழ்மகன் ஒருவனுக்குக்கஷ்டம்நேரிடின் அவன் துயர்துடைக்க ஓரணியில்திரள வேண்டும். அறிஞர் அண்ணு காட்டிய வழிகளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் தமிழுணர்வு கொண்ட தம்பிகள் தமிழின விடுதலைக்கான போராட்டத்தில் முன்னேறி வருகின்றனர்''

மேற்கண்டவாறு முன்னுள் உபசபாநாயகரும், முன்னுள் உடுப்பிட்டி எம்.பியும் தமிழர் கூட்டணிச் செயலதிபர் நாயகமுமான திரு. எம். சிவசிதம்பரம் தென்கருணை வள்ளுவர் சனசமூக நிலையத்தின் 19-வது ஆண்டு விழாவிலும், 9-வது அமரர் அண்ணு நினைவு விழாவிலும் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விழா நிலையத்தலைவர் திரு. தா. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது. திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''முற்காலத்தில் தமிழினம் தன்னகத்தே சாதி, சமய அடிப்படையில் பிரிந்து பிளவுபட்டிருந்ததால் தமிழ்ச் சமுதாயம் ஒற்றுமையின்றிப் பின்தங்க வேண்டிய நிலைஉருவாகியது. அப்பொழுது நாம் வெவ்வேறு கட்சிகளிலிருந்து வெவ்வேறு கருத்துக் கொண்டவர்களாக எம்மினத்தினுள்ளேயே எதிர்த்து வாழ்ந்தோம். இன்று அந்தநிலை மாறிவிட்டது. நாமனைவரும் கட்சி வேறுபாடுகளை மறந்து ஓரணியில் திரண்டு தமிழ்மக்களின் விடுதலைக்காக உழைக்கின்றோம். தமிழ் மக்கள் அனைவரும் இதேபோல் ஒன்றுசேர வேண்டும். அமரர் அண்ணுவின் பாதையில் சென்றல் வெற்றியுடன் வாழவழி பிறக்கும் என்பதுறுதி. அறிஞர் அண்ணு மறைந்தாலும் தமிழ்நாட்டில் அவர் புகழ் மறையாது. அவர்புகழ் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடையே பரந்து வியாபித்துள்ளது''

### ஜெயக்கொடி எம். பி. பேச்சு

உடுப்பிட்டி எம்.பி. திரு.கே. ஜெயக்கொடி பேசும்போது குறிப்பிட்டதாவது:-

''அமரர் அண்ணுவின் பெயரில் இலங்கையில் முதல் சிலை நிறுவியபெருமை இக் கிராம மக்களுக்கேயுரியது. இதன் மூலம் இப்பகுதி மக்கள் இதர கிராமத்தவர்களுக்கு முன்மாதிரி காட்டியுள்ளனர். தமிழ் மக்களிடையே சாதிவேறுபாடு பொருளாதார அடிப்படையிலேயே ஏற்பட்டது. பிறக்கும்போது நாமெல்லாரும் ஒரே இன மக்களாகவே பிறந்தோம். ஆனல் தொழிற்பாகுபாடுகாரணமாகச் சாதிஎன்னும்பேரால் வேறுபட்டோம். இப்பாகுபாடு முற்றாக ஒழிக்கப்படவேண்டும். இங்குள்ளவர்கள் கிழக்குமாகாணத்திலும், ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலுமுள்ள குடியேற்றத் திட்டங்களில் குடியேற முன்வரவேண்டும். இதன் மூலமே நாம் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற முடியும்''

மற்றும் திருவாளர்கள் கே. இரத்தினம், ஏ. நல்லதம்பி, கே. டானியல், பண்டிதர் இ. க. முருகேசு, டாக்டர் பாலகிருஷ்ணன் உட்பட வேறுபலரும் பேசினர்.

கருத்தரங்கும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ)

## நூல் நிலையம் இயங்குகிறது

குடத்தனை, வியா.

இதுவரைகாலமும் இயங்காமல் இருந்து வந்த குடத்தனை கிராமாட்சிமன்ற பொதுசன நூல்நிலையம் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது.

இந்நூல்நிலையப் பொறுப்பாளராக திரு.கே. ஐயாத்துரை உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பலவித நூல்கள் இப்பகுதி வாசகர்களின் உபயோகத்திற்காக வாங்கி வைக்கப்பட்டுள்ளன. (அ)

## ''அரசின் உதவி தேவை''

சாய்ந்தமருது, வியா.

''நமது பகுதியில் உள்ள இயற்கை மூலப்பொருட்களைப் பயன்படுத்தி எமது அன்றாடம் தேவையான அத்தியாவசியப் பொருட்களை நாமே தயாரித்துப் பயன்படுத்துவதினல் மற்றவர்களின்உதவியை நாம் எதிர்பார்க்கும்நிலை நீங்கிவிடும். இச்சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து நடாத்த அரசாங்கம் தேவையான நிதியுதவிகளை வழங்க முன்வர வேண்டும்.''

மேற்கண்டவாறு சம்மாந்துறை புளக்ஜே மேற்கு மாதர் கிராம முன்னேற்றச்சங்கத்தின் வருடாந்த தையல் கைப்பணி பொருட்காட்சி விழாவில் பேசிய சம்மாந்துறைப்பற்று கிராம அபிவிருத்திச்சங்க சம்மேளனத் தலைவர் ஜனுப் யூ. எல். எம். ஹனீபா குறிப்பிட்டார்.

சம்மாந்துறை அல்-மர்ஜான் வித்தியாலயத்தில் நடைபெற்ற இப்பொருட்காட்சியை பொத்துவில் எம். பி. ஜனுப் எம். ஏ. அப்துல்மஜீத் திறந்து வைத்தார். (உ)

## படகுச் சேவை ஸ்தம்பிதம்

வவுணதீவு வியா.

வலையிறவு- வவுணதீவு துறைக்கடவையில் மோட்டார் படகுச் சேவைஸ்தம்பித்துள்ளது. திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே மேற்படி படகுச் சேவை ஸ்தம்பித்துள்ளது எனத் தெரிகிறது.

கன்னன் குடா துறைக்கடவையிலும் மேற்படி காரணமாக பிரயாணிகள் மிகவும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். (உ)

## பழைய காங்கிரஸ் அலுவலகத்திற்கு தீவைப்பு

நாகர்கோவில், மார்ச் 10

நாகர்கோவிலில் பழைய காங்கிரஸ் தேர்தல் அலுவலகம் தீவைத்து கொளுத்தப்பட்டது.

இதனல் அங்கு வைக்கப்பட்டிருந்த காமராஜர், பொன்னப்பநாடார் முதலானோரின உருவப்படங்கள் எரிந்து சாம்பரயின.

இத் தீவைப்புக் குறித்து ஆளும் காங்கிரஸ் ஆதரவாளர்கள் அறுவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (உ)

யாழ்லயன் களியாட்டு விழா

# பொம்மலாட்டம் - ட்றெகுலா நாடகங்களும் இடம்பெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்லயன் கழகம், யாழ் புற்றுநோய் ஆஸ்பத்திரி கட்டடநிதிக்காக யாழ். திறந்த வெளியரங்கில் இம்மாதம் 19ம்–20ம்–திகதிகளில் நடத்தவிருக்கும் யாழ்லயன் களியாட்டுவிழாவில் 20ம்-திகதி இரவு வல்வெட்டித்துறை ஹெலியன்ஸ் நண்பர்களின் பொம்மலாட்டம், ட்றெகுலா ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

ஹெலியன்ஸ் நண்பர்களின் பத்தொன்பதாவது தயாரிப்பான ட்றெகுலா என்ற நாடகம் கிறிஸ்தவ சமயத்தவர் சாத்தான் என்று அழைக்கும் ஒரு பேயின் கதையைக் கொண்டது.

பொம்மலாட்டம் என்ற நிகழ்ச்சி சிறு பொம்மைகளின் நாட்டிய நாடகங்களாகும்.

இந்நிகழ்ச்சியில் பரத நாட்டியம், கோமாளிகள் கும்மாளம் கற்பூரச்சட்டிஏந்தி நடனம் (உருஆடுதல்) காதல்காட்சிகளோடு கூடியநாடகம் ஆகியன இடம்பெறும்.

இந்நிகழ்ச்சி வடமாகாணத்தில் காண்பிப்பவர்கள் வல்வை ஹெலியன்ஸ் நண்பர்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## 12 ஆசிரியருக்குப் பதில் 3 பேர் மட்டுமே!

குடத்தனை, வியாழன்

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றுக் குறையினால் மாணவர்களும், ஆசிரியர்களும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இவ்வித்தியாலயத்தில் 12–ஆசிரியர்கள் முன்னர் கடமைபுரிந்தனர் தற்போது 3–ஆசிரியர்கள் மட்டுமே கடமை புரிகின்றனர். என்.ஜி.சி.ஈ.வகுப்புவரை உள்ள இவ்வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள ஆசிரியப்பற்றுக்குறையினால் பின்தங்கியவடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மாணவர்கள் சீரான கல்வியை உரியகாலத்தில் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர்.

இப்பற்றுக்குறை குறித்து பருத்தித்துறை எம்.பி.திரு. கே.துரைரத்தினம் அவர்களிடம் முறையிடப்பட்டுள்ளது. (அ)

## உதவி செய்ய மறுத்தவரை காத்துநின்று வெட்டினராம்

மாவிட்டபுரம், வியாழன்

தாம் கடன் பெறுவதற்கு உதவி செய்யமறுத்த சக ஊழியர் ஒருவரை காத்து நின்று வாளால் வெட்டினராம் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் இச்சம்பவம் ஒன்று மயிலிட்டியில் இடம்பெற்றது.

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையைச் சேர்ந்த பிரகாசம் தம்பிமுத்து என்பவரே இச்சம்பவத்தில் வாள் வெட்டுக்கிலக்காகி தெல்லிப்பழை ஆஸ்ப்பத்திரியில் அபாயகரமான நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மேற்படி வைத்தியசாலையைச் சேர்ந்த சக ஊழியர் ஒருவர் தாம் கடன்பெறுவதற்கு உதவி செய்யுமாறு இவரிடம் கேட்டபோது இவர் மறுத்ததால் முதலில் கையால் தாக்கிய அந்த ஊழியர் அவர் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய போது வாசலில்காத்து நின்று வாளால் தலையிலும் கையிலும் வெட்டியதாகப் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசார் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

## நள்ளிரவில் கடலில்பாய்ந்து மூதாட்டி தற்கொலை

நெல்லியடி, வெள்ளி

பலமுறை தற்கொலை செய்ய முயன்ற வயோதிப்பெண் நள்ளிரவில் வீட்டைவிட்டு வெளியேறி கடலில் பாய்ந்து தற்கொலைசெய்துகொண்டார்.

வியாபாரிமூலையைச் சேர்ந்த வேதநாயகக்குருக்கள் கைம்பெண் காமாட்சியம்பாள் (78 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

இவரது மரணம் குறித்து உடுப்பிட்டி மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரம் விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மகளான திருமதி எஸ். சிவபாக்கியம் இம்மரணம் குறித்துச் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

'எனது சகோதரர் ஒருவர் இருதய நோயினால் மரணமானார். தகப்பனார் விபத்தொன்றில் மரணமானார். இம்மரணங்கள் அடுத்தடுத்து நடந்தமையால் எனது தாயார் அதிர்ச்சிக்குள்ளானதையடுத்து மனநோய்க்கு இலக்கானார். இந்நோய்க்குநாம் வைத்தியம்செய்தும் பலனளிக்கவில்லை. அத்துடன் இந்நோயுடன் எனது தாயார் இருந்துவருகையில் அடிக்கடி தற்கொலை செய்ய முயன்றபோது அவரை நாம் காப்பாற்றிவந்தோம்.

சம்பவதினத்தன்று இரவு ஒரே அறையில் என் தாயார் என்னுடன் படுத்திருந்தார். சிறிது நேரத்தில் எழுந்து பார்த்தபோது படுக்கையில் கிடந்ததாயாரைக்காணவில்லை உடன் உறவினர்களிடம் சொல்லி தேடுதல் நடத்தியும் தாயாரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் வியாபாரி மூலைச் சந்திக் கடற்கரையில் என் தாயார் இறந்துகிடக்கக் கண்டதாக பருத்தித்துறையிலிருந்து வந்த எங்கள்வீட்டுக்கு அண்மையில்உள்ள கடைக்காரர் ஒருவர் கூறினார். உடன் அங்குபோய் என்தாயாரை இனம்கண்டுகொண்டேன்.

வேறுசிலரும்சாட்சியமளித்த பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சுன்னாகத்தில்

## பட்டப்பகலில் மூதாட்டியின் தங்கச்சங்கிலி கொள்ளை

யாழ்ப்பாணம், வெள்ளி

பட்டப்பகல்வேளைமூதாட்டி ஒருவரின் கண்களில்மிளகாய்த்தூள் வீசப்பட்டு அவர் அணிந்திருந்த 1500 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி கொள்ளையடிக்கப்பட்ட துணிகரச் சம்பவம் ஒன்று சுன்னாகம்-மயிலணியில் நிகழ்ந்துள்ளது.

தம்பிமுத்து சரஸ்வதி (வயது 52) என்ற மூதாட்டியின் தங்கச்சங்கிலியே இவ்விதம் கொள்ளையடிக்கப்பட்டதாகும்.

சம்பவம் பற்றிக்கிடைத்த தகவலையடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் இ. ஏ. ஏ. காதர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினார்.

சம்பவதினம் பகல் 11–00 மணியளவில் பிரஸ்தாப மூதாட்டி வீட்டில் தனிமையாக இருந்தபோது அவரது வீட்டுக்குமுன்புறமிருந்த அவர்களது குழாயில் இருந்து நீரை எவரோ திறந்துவிட்டிருந்தார்களாம். அக்குழாயை மூடுவதற்கு அவர் வெளியே வந்தபோது இனந்தெரியாத வாலிபர் ஒருவர், அவரது கண்களில் மிளகாய்த் தூளை வீசிவிட்டு தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடி மறைந்துவிட்டாராம்.

பிரஸ்தாப வாலிபர் தண்ணீர்க்குழாயைத் திட்டமிட்டுத் திறந்துவிட்டு இக்கொள்ளையை நடத்தியிருக்கிறார் என நம்பப்படுகிறது. (உ)

சண்டிலிப்பாய் கொலை:

## சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றத்தில் சரண்

மாவிட்டபுரம், வியா,

சண்டிலிப்பாய் கொலைச்சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் சரணடைந்த மூன்று சந்தேக நபர்களும் இம்மாதம் 16–ந் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் குணபாலசிங்கம் என்பவர் கடந்த 7–ந்திகதி கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலிசார் பிரஸ்தாப மூன்று சந்தேகநபர்களையும் தேடிவருகின்றனர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த மாரிமுத்து யோகராசா. ஏ.டி. எஸ். சைமன் யோகதாஸ், தவசி செல்லையா ஆகிய மேற்படி மூன்று சந்தேக நபர்களும் சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம்மூலம் நேற்று மல்லாகம் நீதிபதிமுன் சரணடைந்தனர்.

அச்சமயம் மூவரையும் இம்மாதம் 16–ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும் படி நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் உத்தரவிட்டார். (உ)

## யங் றோயல் சாம்பியன்

காங்கேசன்துறை, வியா.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலய பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் காங்கேசன்துறை யங் றோயல் விளையாட்டுக் கழகம், காங்கேசன்துறை குரு விளையாட்டுக் கழகத்தினரை 3 – 2 கோல்களால் வென்று இவ்வருட உதைபந்தாட்டச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினார். (அ)

## கரபந்தாட்ட சாம்பியன்

நீர்வேலி, வியா.

வலி-கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாஜத்தினால் புத்தூர் கிராமசபை விளையாட்டரங்கில் நடாத்தப்பெற்ற கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூகநிலையம் சம்பியனாகியது.

சமாஜத் தலைவர் திருமதி வேதவல்லி கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் புத்தூர் கிராமசபைத் தலைவர் திரு. மு. திருநாவுக்கரசு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். திரு. என். முத்துச்சாமி மத்தியஸ்தராகக் கலந்துகொண்டார். புத்தூர் மேற்கு வளர்மதி சனசமூகநிலைய இரண்டாம் இடத்தைப்பெற்றுக்கொண்டது.

சமாசச் செயலாளர் எஸ். சுந்தரமூர்த்தி நன்றி தெரிவித்தார். (அ)

## "மொழி உணர்ச்சியினால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்து விடாது"

### கட்டுப்பெத்த கருத்தரங்கில் செந்திவேல் உரை

கொழும்பு, வியா

"ஒரு மொழிக்கு இருக்கும் தொன்மையை வைத்துக் கொண்டு அல்லது அந்த மொழியின் இலக்கண, இலக்கியச் சிறப்புகளை வைத்துக் கொண்டு பழம் பெருமைபேசி வெறுமையானமொழி உணர்ச்சியை மட்டும் தூண்டுவதால் அந்த மொழியைப் பேசும் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாது. அதற்குப் பதிலாக நாம் வாழ்கின்ற சமகாலத்தில் நமது நாட்டு மக்களின் சகல பிரச்னைகளையும் பொருளாதார–அரசியல் அடிப்படையில் ஆய்வுசெய்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைளைத் தேடிக்கொள்ளல் வேண்டும்."

மேற்கண்டவாறு சில தினங்களுக்குக் கட்டுப்பெத்த வளாகத் தமிழ்ச்சங்கம் நடாத்திய கலைவிழா கருத்தரங்கில் "மொழியும் பொருளாதாரமும்" என்னும் தலைப்பில் பேசுகையில் இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் தலைவர்களில் ஒருவரான திரு.கே. செந்திவேல் கூறினார். கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் திரு. விஜயசிவாஜி தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் செந்திவேல் தொடர்ந்து பேசுகையில்,

"தமிழ்மொழிக்கு இரண்டாயிரம் ஆண்டுகால வரலாறும் தொன்மையும் உண்டென்பது உண்மையே. அதை வைத்துக் கொண்டு மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன்பே தமிழ் மொழி தோன்றியது என்று கூறுவது தவறாகும். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த மொழி' என்ற கூற்று விஞ்ஞானக் கோட்பாடற்ற வெற்று வசனக் கோர்வையாகும். இதைக் கொண்டு தமிழ் மக்களை வெறும் உணர்ச்சி வசப்படுத்தி உண்மை நிலைமைகளை மறைக்க முடியுமே தவிர பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. தமிழ் மொழிக்கு ஒரு நாடு, தமிழ் மொழிக்கு ஒரு கொடி என்ற பேச்சுக்கள் தமிழ்மக்களுக்கு விமோசனத்தைத் தரப்போவதில்லை. ஏனெனில் நாம் எவ்வளவுதான் இனத்தைப்பற்றியும், மொழியைப்பற்றியும் பேசிய போதிலும் எந்த இனத்தின் மத்தியிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட வர்க்கங்கள் இருந்து வருவதைக் காண்கின்றோம். எனவே ஒரு மொழிக்கு ஒரு நாட்டையும் மொழிக்கு ஒரு கொடியையும் பெற்றுவிடுவதால் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. இந்த உண்மைக்கு ஒரு ஆபிரிக்க தேசியவாதி ஒருவரின் கூற்று முழுமையான காரணமாகும். வெள்ளைக்காரர்கள் எமதுநாட்டை விட்டுச் செல்லும் போது எமக்கு ஒரு அழகான தேசியக்கொடியையும், நாம் அமர்ந்து எமது சொந்த மொழியில் பேசுவதற்கு ஒரு சட்டசபையையும் கொடுத்துச் சென்றது உண்மைதான். ஆனால் எமது மக்களின் பசி. பட்டினிக்கும் காரணமான பொருளாதாரம் மட்டும் இன்றுவரை வெள்ளைக்காரர்களின் கைகளில்தான் இருக்கிறது.' என்று கூறினார். ஒருநாட்டு மக்களின் அடிப்படையான பொருளாதார அமைப்பு விடுதலை செய்யப்பட்டு மனிதனை மனிதன்சுரண்டுவது ஒழிக்கப்பட்டால் இனம் இனத்தைச் சுரண்டவோ, அடக்கவோ வேண்டிய தேவைகள் அற்றுப்போய் விடுகின்றன. எனவே பல் வேறு மொழி பேசும், பல இனம் வாழும் நாட்டின் மொழி- இனப் பிரச்னைகளின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்னையேயாகும். ஒரு நாட்டின்பொருளாதாரப் பிரச்னையின் தீர்வே மொழிகளின் சமத்துவத்தையும் உத்தரவாதம் செய்யும் அடிப்படைகளாகும்'. என்றார்.

## கத்தியைக்காட்டி பணம் பறித்தனராம்

### இருவர் றிமாண்டில்

ஆனைக்கோட்டை, வியா.

பட்டப்பகல்வேளை பஸ்ஸுக்குக் காத்துநின்றவரிடம் கத்திமுனையில் 180 ரூபா அபகரிக்கப்பட்டது.

இச்சம்பவம் ஆனைக்கோட்டையில் நடந்தது.

ஆனைக்கோட்டை வாசியான ஏ. யோகராஜாவின் பணமே இவ்விதம் மூவர் அடங்கிய கோஷ்டியால் கத்திமுனையில் அபகரிக்கப்பட்டதாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டது.

ஆனைக்கோட்டைப்பொலிஸ் சார்ஜன்ட் இராசையா இது தொடர்பாக கொக்குவிலைச் சேர்ந்த செல்வரத்தினம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்வகுமார் அல்லது செல்வம் என்பவர்களைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்ததுடன் அபகரிக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியையும் மீட்டுள்ளனர்.

இச்சந்தேகநபர்கள் யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம்15–ந்திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

மற்றொரு சந்தேகநபர் தலைமறைவாகிவிட்டாராம். (உ)

## பனையிலிருந்து வீழ்ந்து மரணம்

மாவிட்டபுரம், வியா.

கள்இறக்குவதற்காக பனையேறிய சீவல்தொழிலாளி ஒருவர் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக மாண்டசம்பவம் ஒன்று வசாவிளானில் நடைபெற்றுள்ளது.

வசாவிளானைச் சேர்ந்த கிட்

(7-ம் பக்கம் பார்க்க)



# தமிழகத்தின் தன்மானத்தை போக்கியவர் கருணாநிதி

## எம். ஜி. ஆர். கூறுகிறார்

அ. இ. அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கோவை மாவட்டத்தில் திரு. எம். ஜி. ஆர். சூறாவளி சுற்றுப்பயணம் செய்துவருகிறார்.

கோயம்புத்தூர், மார்ச் 10 ''தமிழகத்தின் தன்மானத்தைப் போக்கிய திரு. கருணாநிதியுடன் பழைய காங்கிரஸ் தலைவர் திரு. பி. ராமச்சந்திரன் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்'' என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சொன்னார்.

கோவை சிதம்பரம்பூங்கா மைதானத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. எம். ஜி. ஆர். பேசுகையில் ''இப்போது நடக்கும் தேர்தல் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தலாகும். இதற்கு முன்னர் நடந்த தேர்தல்களைப்போல்இதையும் நினைத்துவிடாதீர்கள். இந்திய நாட்டுக்கு வாழ்வா? சாவா? என்பதை முடிவுசெய்யும் தேர்தல் இது. சமுதாய சீர்திருத்தம், மேம்பாடு கொண்ட நாடாக இந்தியா இருக்க சோஷலிஸ சமுதாயம் அமைக்க - சுதந்திர நாடாக இந்தியா தொடர்ந்து இருக்க நீங்கள் எடுக்கும் முடிவு மிக முக்கியமானதாகும். தேர்தலுக்குப் பின் பழைய காங்கிரஸ் இருக்காது. ஜனதா ஆட்சிதான் இருக்கும் என்று திரு. மொரார்ஜிதேசாய் பேசியிருக்கிறார். பழைய காங்கிரஸ் தொண்டர்கள் காமராஜரை தெய்வமாக மதிப்பவர்கள். அப்படிப்பட்ட தொண்டர்கள் தனித்தன்மை இழந்து ஜனதா கூட்டணியில் சேர்வதா? இது வேதனை தருகிறது.''

மேடையில் இரண்டு குழந்தைகளுக்கு எம். ஜி. ஆர் பெயர் வைத்தார். (உ)

# எம்.ஜி.ஆரையும்என்னையும் இனிப் பிரிக்க முடியாது

## சிவாஜிகணேசன் கூறுகிறார்

குன்னத்தூர், மார்ச் 10 ''என்னையும் எம். ஜி. ஆரையும் இனிப் பிரிக்க முடியாது'' என்று திரு. சிவாஜி கணேசன் கூறினார்,

கோபித் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ்வேட்பாளர் கே. எஸ். ராமசாமியை ஆதரித்து குன்னத்தூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. சிவாஜி கணேசன் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.

திரு. பி. எம். சுப்பிரமணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. சிவாஜி கணேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''ஜனதா கட்சியினர் ஒரு கார்ட்டூன் போட்டுள்ளனர். அதில் இந்திரா காந்தியின் பின்புறம் இரு நாய்கள் செல்வதுபோல படம் போட்டுள்ளார்கள். அதில் ஒரு நாயாக என்னையும் இன்னொரு நாயாக எம். ஜி. ஆரையும் சித்தரித்துள்ளனர். ஆம் அது உண்மைதான். நாங்கள் நாய்கள்தான். ஆனல் வெறி நாய்கள் அல்ல. நாட்டைக் காக்கும் நன்றியுள்ள நாய்கள் தான் நாங்கள். எந்த ஜனதா அணியினராலும் என்னையும் எம். ஜி. ஆரையும் பிரிக்கமுடியாது. திசைதிருப்பிவிடவும் முடியாது. நாங்கள் இருவரும் இந்திராகாந்திக்கு ஆதரவாக புனிதமான தேர்தலாகிய வேள்வித்தீயில் நடக்கத் தயார்.''

### என் அண்ணன் எம். ஜி. ஆர்.

தாராபுரம் நகராட்சிஉயர்நிலைப் பள்ளிக்கூட மைதானத்தில் நடைபெற்ற இப் பிரசாரக்கூட்டத்தில் சிவாஜி கணேசன் பேசுகையில் கூறியதாவது:

''நான் உங்கள் கால்களில் விழுந்து வாக்குக் கேட்கிறேன். முற்போக்கு அணியில் நிற்கும் திரு. சி. சுப்பிரமணியத்திற்கும், திரு. ராஜூவுக்கும் வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள். திரு. சுப்பிரமணியம் விவசாயிகள், தொழிலாளர்களுக்காக திட்டங்கள்

(7-ம்பக்கம் பார்க்க)



# இந்தியத் தேர்தல் அரங்கு

# கருணாநிதி ஒரு சர்வாதிகாரி

## எம். ஜி. ஆர். தாக்கு

சென்னை, மார்ச் 10 ''தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி முதல் அமைச்சராக இருந்தகாலத்தில் சர்வாதிகாரிபோல் நடந்துகொண்டதுடன் தமது பதவியை தனது நன்மைக்காகப் பயன்படுத்திவந்தார். ஆனல் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சாதாரண பிரஜைகளுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு ஆட்சி செலுத்தி வந்தார்.''

இவ்வாறு அ. அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஈரோடில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக திரு. கருணாநிதி சொல்லிவருகிறார். அவர் பதவியிலிருந்தபோது இந்த 'மிசா' சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்து தமக்கு விருப்பமில்லாதவர்களைக் கைது செய்து வந்தாரே அதில் என்ன நியாயம் இருக்கிறது என்றும் திரு. எம். ஜி. ஆர். கூறினார்.

### அரசியல் அடைக்கலம்

தமிழ் நாடு முன்னாள் முதல்வர்திரு.கருணாநிதி பதவியிலிருந்தபோது அவரின்உதவியுடன் சோஷலிஸ்ட் கட்சித் தலைவரும் தற்போது சிறையில் இருப்பவருமான திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸுக்கு தமிழ் நாட்டில் அரசாங்க அதிகாரிகள் சிலர் அரசியல் அடைக்கலம் கொடுத்திருந்தனர் என்று இக்கூட்டத்தில் பேசிய சென்னை அ. அ. தி. மு. க. அமைப்பாளர் ஜனுப் ஜப்பார் கூறினார். (இ)

# ஊழல் பேர்வழி நீரா, நானா?

## எம். ஜி. ஆர்.மீது கருணாநிதி பாய்ச்சல்

திருப்புவனம், மார்ச் 10 ''ஊழல் பேர்வழி யார்? நானா? எம். ஜி.ஆரா?'' என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி மதுரை மாவட்டத்தில் உள்ள திருப்புவனத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கேட்டார்.

''என்னைப் பார்த்து ஊழல் பேர்வழி என்று எம். ஜி. ஆர். கூறுகிறார். ஊழல் செய்வது அவர்தான். அரசு நிலத்தில் சத்யா ஸ்ருடியோ அமைத்துக் கொண்டு அந்நிலத்தை திரும்ப ஒப்படைக்காமல் இருந்து வருகிறார்'' என்று திரு கருணாநிதிகுற்றஞ்சாட்டினர். ஊழல் குற்றம் நிரூபிக்கப்பட்ட கருணாநிதி வாக்குக் கேட்க வரலாமா' என்று தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் எம். ஜி. ஆர். கேட்டுவருவது குறித்து பதிலளிக்கையில் திரு. கருணாநிதி இவ்வாறு கூறினார்.

இதுபற்றி திரு. கருணாநிதி மேலும் கூறுகையில் ''நம்மைப் பார்த்து ஊழல், ஊழல் என்று கூப்பாடு போடுகிறார்கள். ஊழலைச் செய்தவரே அந்த நடிகர்தான். வருமான வரி, அந்நிய செலாவணி, ஊழல்கள் கடைந்து எடுத்த பேர்வழி அந்த நடிகர்'' என்றார். (உ)


# தலை போகிறதா






பாடசாலை செல்லும் பிள்ளைகளின் நாய்மார்களுக்கு அப்படித்தான்... ஆனல் கெமெக்ஸேனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால் அப்படியிருக்கத்தேவையில்லை. தலைப்பேனை முற்றாக ஒழிக்க துரிதமான, நம்பிக்கையான வழி அதுவே. உங்கள் பிள்ளைகளின் தலையில் கெமெக்ஸேனை ஒரு தடவை உபயோகித்தால் போதும்- பேன் முற்றாக அழிந்துவிடும். மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3 வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகியுங்கள் கெமெக்ஸேன் பாதுகாப்பானது, புண்படுத்தாதது. இதமான வாசனையுடையது.

கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6.

INTASEL

**நாகம்ஸ்**
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
**அன்பைத்தேடி**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி — வாணிஸ்ரீ
**நிறைகுடம்**

**வெலிங்டன்** எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**தனிப்பிறவி**

**லிடோ** போன்: 7693 சிவகுமார் — ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
**வெள்ளிக்கிழமை விரதம்**
(புதிய பிரதி)

**றீகல்** தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
(யாழ்ப்பாணம்)
**CRAZY BOYS MUSKETEERS**
குறும்புக்கார வாள் வீரர்கள்

Crazy Boys are back with the Musketeers to entertain you. Do join in their fun along with your kids.

குறும்புக்காரப் பையன்கள் உங்களை மகிழ்விக்க இங்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் அட்டகாசம் உங்களை வயிறுபுண்ணாகும் வரை சிரிக்க வைக்கும். அவர்களின் குறும்பில் நீங்களும் பங்குகொள்ளத் தவறாதீர்கள்.

**RIO** (Jaffna) Daily 4 Shows
**The Girl Who Couldn't Say No**
(Adults only)
Gloriously Funny Commedy of A Girl so warm Hearted that she couldn,t say No and to add to her problems Men find her irresistable

**ராஜா** ஸ்ரீகாந்த் - பிரமிளா
[யாழ். நகர்] நாகேஷ் - லக்ஷ்மி (பசு)
தினசரி 4 காட்சிகள் நடித்த
**கோமாதா என் குலமாதா**
ஈஸ்மன் கலர் (புதியபிரதி)

**ஸ்ரீதர்** ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
**பாட்டும் பரதமும்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** கமலஹாசன் -- தீபா - சாவித்திரி
நடித்த
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
**அந்தரங்கம்**

**வின்ஸர்** கமலஹாசன் - ஸ்ரீவித்யா
[யாழ். நகர்] சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**அபூர்வ ராகங்கள்**

6-வது வெற்றி வாரம்!
**மனோகரா** எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)


# கரவெட்டி தாக்குதல்வழக்கு 11 பேர் மீது விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

கரவெட்டி ஊராமூலை கரவெட்டி மேற்கில் 1975-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி க. கற்கண்டன், வீ. சிவசோதி, க. கந்தசாமி, க. செல்வராஜா, ஆ. வன்னியசிங்கம், க. கந்தன். வ. நாகேந்திரன், வீ. குலசிங்கம், வா. கணேஷன், சி. ரத்தினம், சி. பொன்னன், ஆகிய எதிரிகள் 11 பேரும் ஆர். ஆர். ராஜதுரை என்பவரை தாக்கிப்படுகாயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு. செங்காதரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இவ்வழக்கில் சட்டவிரோதமாகக்கூடி ராஜதுரை என்பவரை வாளால் வெட்டியும், பொல்வால் தாக்கியும் காயம் விளைவித்ததாக 13குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜராகியுள்ளார். யாழ். ஆஸ்பத்திரி ஒலிக்கதிர் படவியலாளர் செ. பாலசுப்பிரமணியம் சாட்சியமளித்த பின்னர், காயக்காரரான ஆர். ஆர். ராஜதுரை சாட்சியமளித்தார். அப்போதுஅவர், சம்பவ தினம் 20, 25 பேர் தனது வீட்டிற்கு வந்து தன்னைக்கூப்பிட்டதாகவும், தொடர்ந்து 1-ம் எதிரி தன்னை வாளால் வெட்ட, 2-ம் எதிரி இரும்புக் கம்பியாலும், 3-ம், 4-ம் எதிரிகள் கொட்டனாலும் தாக்கினார்கள் என்றும் அறிவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு அறிவுதிரும்பியதாகவும்சொன்னார். சேவியர் கருணைரத்தினம் என்பவர் சாட்சியமளிக்கையில் தாமும் பிரஸ்தாப தாக்குதல் சம்பவத்தைக்கண்டதாகச் சொன்னார்.

1-ம் 2-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம், சட்டத்தரணி செ. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார். 3-ம் 4-ம் எதிரிகள் சார்பில் எஸ். ஜெயசிங்கம் எஸ். ஜெ. கிருஷ்ண கிருஷ்ராஜாவின் அனுசரணையுடனும், 6-ம்எதிரி சார்பில் திரு. எஸ். கிருஷ்ணராசாஜாவும், 7-ம் எதிரி சார்பில் எஸ். வேலும்மயிலும், 8-ம், 9-ம், 10-ம், 11-ம் எதிரிகள் சார்பிலும் ஆஜரானார்கள். நெல்லியடி பொலிசாருடன் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம்வழக்கை நடத்தினார். இம்மாதம் 23-ம் திகதிக்கு வழக்கு ஒத்திபோடப் பட்டது. (ஆ)



## தவக்கால நற்சிந்தனை

'ஆண்டவர் உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது, பரலோகத்தில் சிலுவையின் அடையாளம் காணப்படும். பூலாகத்தில் தங்கள் உயிரோடு இருக்கும்போது சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவுக்கு அடங்கியிருந்த சிலுவையின் ஊழியர் தங்கள் நீதிபதியாகிய அவரிடம் மிகுந்த தைரியத்தோடு வருவார்கள்'.

(கிறிஸ்துநாதர் அனுசாரம்)

சிலுவையின் கோலம் வெறும் பாவமன்னிப்புக்கு மட்டும் ஏற்பட்டதன்று. அப்பரிசுத்தசின்னம்நியாயத் தீர்ப்புக்கு வழிகாட்டியாகிய இராஜபாதையுமாகும். நாம் செய்கின்ற பழிபாவங்கள், பல்வகைக் கேடுகள் அத்தனைக்கும் கடைசிக்காலத்தில் நியாயந்தீர்க்கும் சின்னமாகவும் சிலுவை காட்சியளிக்கிறது,

அந்தப் பரிசுத்த சின்னம் இதோ நம் கண் முன்னே காட்சியளிக்கிறது. அதை நெருங்குவதற்கு நாம் ஏன் பயப்படவேண்டும்? இப்பரந்த உலகத்திலே நமது கடைசிக் காலத்தில் யார் துணையாக இருக்கப்போகிறார்கள். துணை நிற்பது ஒன்றேஒன்றுதான். நம்மைக் கட்டியணைத்து, நம் பாவங்களை மன்னித்து நமக்கு நித்திய இளைப்பாறுதல் அளிக்கப்போவது சிலுவைதானே.

நமது ஆன்மாவிற்குப் பாதுகாவலும், ஜீவியத்திற்கு வழிகாட்டியும் இரட்சணியத்தின் பீடமும், விரோதிகளிடமிருந்து காப்பாற்றும் கேடயமும், சோர்வுக்குஊக்கமும், சோம்பலுக்குச் சுறுசுறுப்பும், பலவீனத்திற்கு வீரமும், துன்பத்திற்கு இன்பமும், உறக்கத்திற்கு விழிப்பும் ஆகியஎல்லாவற்றிற்கும் எல்லாமாகத் துணைபுரியும் தெய்வீகச் சின்னமாம் சிலுவையைமறந்து நாம் எங்கே போய் வாழமுடியும்.

—ஞானஒளி


**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—தேவிகா
**அன்புக் கரங்கள்**


## பனையிலிருந்து...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டிணன் சீனியன் (40 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

வழமைபோல் காலமானவர் சம்பவதினமும் கள் இறக்குவதற்காக பனையொன்றில் ஏறி கள் இறக்கியசமயம் பனையிலிருந்து தவறி வீழ்ந்ததையடுத்து மரணமானதாக இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா நடத்திய மரண விசாரணையில் தெரியவந்தது.

காலமானவரின் மனைவி தவமணி, மருமகள் ஞானேஸ்வரி ஆகியோர் சாட்சியமளித்ததையடுத்து விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

## பிரிவுபசார விழா

மாவிட்டபுரம், வியா.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி 13ஊழியர்கள் இடமாற்றம் பெற்றுள்ளதனையொட்டி அவர்களுக்கு வைத்தியசாலை சேமநலச்சங்க ஆதரவில் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் பிரிவுபசாரவிழா வொன்று வைத்தியசாலை வெளிநோயாளர் மண்டபத்தில் நடத்தப்பட்டது. (உ)

## இன்று கூடி ஆலோசிப்பர்

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச்சேவைச் சீரமைப்பு தொடர்பாக வேலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் இன்று 11ந் திகதி வெள்ளிக்கிழமை ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. தீவுப் பகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் ஆலோசனைக்கூட்டத்தில் படகுச் சேவையில் உள்ள தொழிலாளர்களும் உத்தியோகத்தரும் பொதுஸ்தாபனங்களில் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். (அ)

## எம். ஜி. ஆர். . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டு அவற்றை நிறைவேற்றி வருகிறார்; ராமன் சென்ற இடமெல்லாம் அயோத்தி என்பார்கள். அதேபோல திரு. சி. சுப்பிரமணியம் எங்கு சென்றாலும் அது வளம்கொழிக்கும் சொர்க்கபூமியாகும்.

நாட்டை வளம்படுத்த நானும் எம். ஜி. ஆரும் ஒரே அணியில் இருக்கிறோம். எமது கூட்டணிகளான இரட்டை இலைக்கு வாக்குப்போட்டால் அது என் அண்ணன் எம். ஜி. ஆருக்கு. பசுவும் கன்றுக்கும் வாக்குப்போட்டால் அது எனக்கு.'' இவ்வாறு சிவாஜிகணேசன் பேசினார். (உ)


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. ஈடு/451

தொல்புரம் சுழிபுரத்தைச் சேர்ந்த
1. பொன்னர் சிற்றம்பலம்
2. பொன்னர் கந்தசாமி

வாதிகள்

எதிராக

கொட்டியாவத்தை தொல்புரம் சுழிபுரத்தைச் சேர்ந்த
1. முருகன் சின்னவர்
2. பெண் சிவக்கொழுந்து

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/ 451-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1977-ம் ஆண்டு சித்திரைமாதம் 25-ம் திகதி திங்கட்கிழமை (25-4-1977) முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்தவாதிகளுக்கு ரூபா 2760ம் மேலும் ரூபா 2300க்கு வருடமொன்றிற்கு நூற்றிற்கு 12% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1974-ம் ஆண்டு மார்கழிமாதம் 6-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1976-ம் ஆண்டு பங்குனிமாதம் 5-ம் திகதிவரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும் வழக்குச்செலவு ரூபா 593-10 சதம் கொடுக்க வேண்டும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக்கோவிற்பற்று தொல்புரம் இறை ''நாசுவன் தறையும் மறுபிரிவுகளும்'' பர. நில. இலா. இரண்டு குழி பதின்மூன்றையும் கிணற்றில் பங்கும் தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்துகளும் வடக்கே இருக்கும் ஒழுங்கைக்குப் போக்குவரவுக்காக விடப்பட்ட 12 அடி அகலமுள்ள பாதை உரித்தும், இதற்கு எல்லைகிழக்கு 9 அடி அகலமுள்ள பாதையும் கிணற்று தூர்வை வழிவாய்க்காலும், வடக்கு முருகன் செல்லனுக்கும் பெண் இலட்சுமிக்குமுரிய ஆதனம், மேற்கு குமரப்பெருமாள் கணபதிப்பிள்ளைக்குமுரிய ஆதனம். தெற்கு குறித்த கணபதிப்பிள்ளைக்கும் வயிரமுத்தாபிள்ளை பெண் இராசாத்திக்குமுரிய ஆதனம். இதடங்கலும் ஈ. 372/161.

**சி. ஆ. த. வடிவேலு J. P.**
நீதிமன்ற விற்பனைஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

'வடிவேல் உதயம்'
காங்கேசன்துறை வீதி
கோண்டாவில்.
1-3-77.

5640

ஈழநாடு சந்தா
(தபால் மூலம் விநியோகம்)
(தினசரி – வாரமலர் உட்பட)

3 மாதம் ரூ. 47-00
6 மாதம் ரூ. 94-00
1 வருடம் ரூ. 188-00

ஈழநாடு
The EELANADU

ஈழநாடு சந்தா
(ஆள் மூலம் விநியோகம்)
(யாழ்– மாநகரசபை எல்லைக்குள்)
(தினசரி- வாரமலர் உட்பட)

3 மாதம் ரூ. 37-50
6 மாதம் ரூ. 75-00
1 வருடம் ரூ. 150-00

# மட்டுநகரில் கவிஞர்காசி!

# இராசதுரை நிலைஎன்ன?

## கொழும்பில் இரு கோஷ்டிகளும் ஆதரவு தேடுகின்றன

கொழும்பு, வியாழன்

**அடுத்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக இளைஞர் பேரவைத் தலைவர் கவிஞர் காசி ஆனந்தனே போட்டியிடுவாரென்பது நிச்சயமாகிவிட்டதாகக் கூட்டணி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.**

இதே சமயம் கிழக்கிலங்கையின் பழுத்த அரசியல் வாதியென்றும் மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சியை வளர்த்தெடுத்தவரென்றும் பெயர் பெற்ற மட்டக்களப்பின் தற்போதைய முதல் எம். பி. திரு. செ. இராசதுரையை மீண்டும் மட்டக்களப்புத் தொகுதியிலேயே கூட்டணியின் வேட்பாளராக நிறுத்தவேண்டுமென்று மற்றொரு சாரார் முயற்சி செய்து வருகின்றனர்.

கவிஞர் காசி ஆனந்தனையே மட்டக்களப்பில் கூட்டணி வேட்பாளராகநிறுத்தவேண்டுமென்ற கோஷ்டியின் தூதுக் குழுவொன்றும் திரு. இராசதுரையைத்தான் மட்டக்களப்பில் மீண்டும் வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்று கோரும் கோஷ்டியின் தூதுக் குழுவொன்றும் இப்போது கொழும்பில் முகாமிட்டுள்ளன.

தமிழர் கூட்டணித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும்மற்றும் கூட்டணித் தலைவர்களையும் இத் தூதுக்குழுக்கள் சந்தித்து வற்புறுத்தி வருகின்றன.

மட்டக்களப்புத்தொகுதியில் திரு. இராசதுரையை மீண்டும் வேட்பாளராக நியமிக்காத பட்சத்தில் 26ந் திகதிக்குப் பின் திரு. இராசதுரை தமது எதிர்காலத்திட்டம் பற்றி முக்கிய முடிவொன்றை வெளியிடுவாரென்று திரு. இராசதுரையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க கிழக்கு மாகாணத்தில் மூதூரில் பிரதி தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஜனப் எம். எல். ஏ. மஜீத்துக்கெதிராக இலங்கை வானொலியில் கடமையாற்றும் முஸ்லிம் பிரமுகர் ஒருவர் கூட்டணியின் சார்பில் போட்டியிடலாமெனக் கூறப்படுகிறது.

## "சுதந்திரக்கட்சியிலேயே கேட்கவேண்டும்"

### தியாகர் பற்றி சூரியரிடம் வற்புறுத்து

பண்டத்தரிப்பு, வியாழன்

"தற்போது சுதந்திரக்கட்சி எம். பியாக இருக்கும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராஜா எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் அபேட்சகராகவே போட்டியிடவேண்டும். அப்படியில்லாது அவர் சுயேச்சையாகவோ வேறு கட்சியிலோ தேர்தலில் போட்டியிட்டால் இவருக்கெதிராக வட்டுக்கோட்டைத் தொகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஒருவரை நிறுத்தவேண்டும்." இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளர் கோஷ்டி ஒன்று அண்மையில் தபால் அமைச்சரும் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியரைகிளிநொச்சியில் நேரில் சந்தித்து வற்புறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

## கட்டுப்பாடுகளை மீறுவோர்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

முதல்தினம் யாத்திரிகர்கள் இம்முறை குறைவாகக் காணப்பட்டனர் என்றே சொல்ல வேண்டும்.

இதற்குக் காரணம் கடந்த முறையிலும் பார்க்க இம்முறை அதிகாரிகளின் கெடுபிடிகள் கூடுதலாக இருந்ததேயென்று கருதப்படுகிறது.

அடையாள அட்டை இல்லாத யாத்திரிகர்கள் தாம் சமீபத்தில் எடுத்தபுகைப்படத்துடன் தமது பகுதி கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரத்தையும் கொண்டுவரும் பட்சத்தில் அனுமதிக்கப்படுகின்றனர்.

கச்சதீவில் தம் அடையாள அட்டையையோ, அத்தாட்சிப் படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தையோ தற்செயலாக தொலைத்துவிட்டோர் அங்குள்ள அரசாங்க அலுவலகத்திற்குச்சென்று தற்காலிக அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவ்விதமில்லாது தாம் கொண்டு சென்ற பத்திரங்களைத் தொலைத்துவிட்டு வருவோர் துறைமுகத்தினைவிட்டு வெளியேவருவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகங்களில் பொலிஸ், இராணுவ, சுங்கப் பகுதி உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கொழும்பில் இருந்து வந்த குடிவரவு–குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்றும் இங்கு விஜயம்செய்து துறைமுகங்களில் கடமையில் ஈடுபட்டது.

உற்சவம் தொடர்பாக யாத்திரிகர்களுக்கு விதித்துள்ள உத்தரவுகளை மீறுவோர் மீது இம்முறை சட்டநடவடிக்கை துரிதப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது

கொண்டு செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய் (ஒரு போத்தல்நீங்கலாக) உட்பட மற்றும் பொருட்களை கச்சதீவில் வைத்திருந்தாலும் சட்டப்படிஅவை பறிமுதலாகும் என்று சுங்க அதிகாரி ஒருவர் சொன்னார்.

### படகுக்காரருக்கு எச்சரிக்கை

உத்தரவுக்கு மாறாக சட்ட விரோத பொருட்களை ஏற்றிச் செல்லும் படகுக்காரர்களுக்கும் படகு உத்தரவுப் பத்திரங்கள் உடன் ரத்துச்செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்.

இந்தவகையில் படகுகள் மீதான சோதனை தீவிரப்படுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார். (உ)

## இருவர் ரிமாண்டில்—

(1–ம் பக்கத் தொடாச்சி)

யில் அணிவகுப்பு நடைபெற்றது.

சங்கானைப் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட எஸ். நரேந்திரன், ஆர். ஆனந்தராஜா, ஜே. ஜேசுதாசன், கே.சிவகுமாரன், வி. சூரியகுமார், ரி. சிவகுமார், ஆர் அபயகான் ஆகிய 7 பேர் நீதிபதிமுன் அடையாள அணிவகுப்பின் போது ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் கைதாகி சங்கானை பொலிஸ் பாதுகாப்பில் இருந்தமையால் அவர்களை வைத்து இவ் வணிவகுப்பு நடத்தப்படுவது நியாயமல்ல என்று 1–ம், 3–ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி கே. குணரத்தினத்தின் உதவியுடன் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் பதில்நீதவானிடம் தெரிவித்தார்.

### ஆட்சேபனைகள் நிராகரிப்பு

முதலாம் திகதி நடைபெற்ற சம்பவத்திற்கு இரு தினங்களுக்கு முன் நடைபெற்ற சில அசம்பாவித சம்பவங்கள் தொடர்பான சாட்சிகளும் இன்று வந்துள்ள 17 சாட்சிகளில் உள்ளனர் என்று ஏனைய சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் வி. ஆனந்தசங்கரி, மு. ஆலாலசுந்தரம், வி. யோகேஸ்வரன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரான சட்டத்தரணி சு. நடராசா நீதவானிடம் ஆட்சேபித்தார்.

இந்த ஆட்சேபனைகளை நிராகரித்த நீதவான் அணிவகுப்புக்கு உத்தரவிட்டார்.

வளாக மாணவ மாணவிகள் 17 பேர் சாட்சிகளாக வந்திருந்தனர்.

சங்கானை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜனப் நியாஸ்டீன் பொலிஸ் தரப்பில் ஆஜரானார். [உ-இ]

## இன்று பிரியாவிடை

யாழ்ப்பாணம்: வெள்ளி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 25 ஆண்டுகள்ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. கா. துரைசிங்கத்திற்கு சேவை நலம் பாராட்டு விழா இன்றுநடைபெறுகிறது. இவ்விழா கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது. (அ)

ரோயல்-தோமஸ்

## 98-வது கிரிக்கட் போட்டி இன்று

[கொழும்பு]

கொழும்பில் உள்ள பிரபல்யம்வாய்ந்த கல்லூரிகளான ரோயல் கல்லூரிக்கும் சென். தோமஸ் கல்லூரிக்குமிடையேயான 98–வது வருடாந்தக் கிரிக்கட்போட்டி இன்று காலை 10 மணிக்கு கொழும்பு சரவணமுத்து விளையாட்டுமைதானத்தில் ஆரம்பமாகின்றது.

ரோயல் கோஷ்டிக்கு அசோக் ஜெயவிக்கிரமாவும் தொமஸ் கோஷ்டிக்கு அஜித் கணேசனும் தலைமைதாங்குகிறார்கள். நாளையும் ஆட்டம் தொடரும். (இ)

## 38 புதிய சட்டத் தரணிகள்

கொழும்பு, வியாழன்

இன்று 38 புதிய சட்டத்தரணிகள் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். பிரதம நீதியரசர் திரு விக்டர் தென்னக்கூன், நீதியரசர் திரு. சர்வானந்தா, நீதியரசர் திரு. ஜி. விமலரத்ன ஆகியோர் முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்தனர். (ஆ)

## யாருடையது?

யாழ். லிங்கம்ஸ் .சில்க் கவுஸைச் சேர்ந்த இ. சேது குமார்என்பவரால் யாழ்.ரயில் நிலையத்தடியில் கண்டெடுக்கப்பட்ட 6திறப்புக்கள் கொண்ட கோர்வையொன்று ஈழநாடு காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## கோஷ்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னரின் உதவியுடன் யாழ். குற்றப்பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் திருநாவுக்கரசு இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்டுள்ளார் (உ)

## சேர் பொன்

(1–ம் பக்கத் தொடர்3சி)

நடைபெற்றமுத்திரை வெளியீட்டு வைபவத்தில் ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டு முத்திரையை வெளியிட்டுவைத்தார். (இ)

## மந்திரிசபை

1ம் பக்கத் தொடர்ச்சி

மைப்பு கட்டட நிர்மாணத் துறை அமைச்சை, தபால் அமைச்சரான திரு.செல்லையா குமாரசூரியர் ஏற்றுக்கொண்டார்.

பிரதி தபாலமைச்சராக விருந்த திரு. வி. ரி. ஜி. கருணாரத்தின புடவைத் தொழிலுக்குப் புதிய அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பதாலும், பிரதிக்கல்வியமைச்சர் பதவியிலிருந்து திரு. பி. வை. துடாவை ராஜினாமாச் செய்ததாலும்ஏற்பட்ட பிரதியமைச்சர் பதவிகள் இன்னும் காலியாகவே இருக்கின்றன.

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் பதவியிலிருந்து திரு. ரி. பி. சுபசிங்கா ராஜினாமாச் செய்ததைத்தொடர்ந்தே மந்திரிசபையில் இந்தமாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63–ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna Telegram: Eelanadu Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.